CC 16/2021
PW 1 Selvakumar
12.01.2024
Accused present.

**அ.சா.1 செல்வக்குமார் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் கொடுத்த புகாரில் குறிப்பிட்டுள்ள சம்பவங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கோபால கிருஷ்ணன் என்பவர் சொல்லித்தான் எனக்கு சம்பவம் பற்றி தெரியும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலமானது கொரனா தொற்று காரணமாக ஊரடங்கு உத்தரவு பிறப்பித்த காலம் என்றால் சரிதான். அந்த சமயத்தில் மக்கள் அனாவசியமாக நடமாட முடியாது என்று காவல் துறையினர் ஆங்காங்கே பாதுகாப்பிற்கு போடப்பட்டிருந்தார்கள் என்றால் சரிதான். எனது மகனுக்கு அன்றைய தினம் கல்லூரி விடுமுறை என்றால் சரிதான். என் மகன் ஹரிஷிற்கு ஓட்டுனர் உரிமம் இருந்ததா என்றால் எல்எல்ஆர் தான் இருந்தது. அதை நான் நீதிமன்றத்தில் இந்தப் புகாருடன் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு நினைவில்லை. என் மகன் ஓட்டி வந்த பல்சர் வாகனத்தின் உரிமையாளர் யார் என்றால் பக்கத்து வீட்டு பையனுடையது. அவர் பெயர் ஸ்ரீராம் ஆகும். என் மகனுடன் யாரெல்லாம் மருத்துவமனைக்கு சென்றார்கள் என்றால் கோபால கிருஷ்ணன் மற்றும் அருண் சென்றார்கள். திருப்பூரில் ஆதார் மருத்துவமனைக்கு சென்றார்கள். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து ஆதார் மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்றால் காவல் நிலையத்தை தாண்டித்தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். அப்போது அவருடன் சென்ற நபர்கள் யாரெனும் புகார் கொடுத்தார்களா என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதன் பின்னர் ஆதார் மருத்துவமனையிலிருந்து காவல் நிலையத்திற்கு இன்டிமேசன் கொடுத்தார்களா என்றால் காவல் துறையினர் தான் சம்பவ இடத்திலிருந்து ஆதார் மருத்துவமனைக்கு செல்லுமாறு கூறியுள்ளார்கள். ஆனால் மருத்துவமனையிலிருந்து காவல் துறையினருக்கு இன்டிமேசன் கொடுக்கப்பட்டதா என்ற விபரம் எனக்கு தெரியாது. போலீசார் ஆதார் மருத்துவமனைக்கு செல்லுமாறு ஏதேனும் குறிப்பு கொடுத்ததாக இவ்வழக்கில் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவ்வாறு எந்த குறிப்பும் தரவில்லை. நான் எங்கெல்லாம்

என் மகனுக்கு சிகிச்சை அளிக்க அழைத்துச் சென்றேன் என்றால் 07ம் தேதி மாலை ஆதார் மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு 08ம் தேதி கோவை சாந்தி சோசியல் சர்வீஸ் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். பின்னர் 09ம் தேதி ஊரடங்காக இருந்ததால் 10ம் தேதி கோவை பிரகதி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அட்மிட் செய்து, பின்னர் 11ம் தேதி ராமகிருஷ்ணா மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் என் மகன் இறந்துவிட்டார். மேற்சொன்ன கோவை சாந்தி சோசியல் சர்வீஸ், கோவை பிரகதி மருத்துவமனையிலிருந்து ஏதேனும் விபத்து இன்டிமேசன் காவல் துறையினருக்கு பெறப்பட்டதா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. மேற்சொன்ன மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மோகன் என்பவரின் கம்பெனி விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கும் என்றால் சுமார் 1/2 கி.மீ தூரத்திற்குள் இருக்கும். என் மகனுடன் பயணம் செய்த பிரபாகரன் என்பவருக்கும் காயம் ஏற்பட்டதாகவும், அவர் சிகிச்சை பெற்றதற்கான காயச் சான்றிதழை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். அந்தக் காயச் சான்றிதழில் சம்பவம் எங்கு நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் வக்கீல் தோட்டம் அருகே நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது. எங்கள் குடும்பத்தில் யாரேனும் ஆடு மேய்க்கும் தொழிலோ அல்லது வியாபாரமோ செய்து வருகிறோமா என்றால் இல்லை. எதிரி ஓட்டி வந்ததாக சொல்லப்படும் லாரி லோடு ஏற்றிக் கொண்டு கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சரியான பாதையில் வந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். என்னுடைய மகனும், பிரபாகரனும் ஒரு ஆட்டுக் குட்டியை நடுவில் வைத்துக் கொண்டு எதிர் திசையில் வேகமாக வந்து கொண்டிருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் சமயம் கொரனா தொற்று காலம் என்றும், அங்கிருந்த தோட்டத்திலிருந்து ஆட்டை திருடிக் கொண்டு வரும் போது, போலீசாரைப் பார்த்து வேகமாக வந்ததால் தான் நிலை தடுமாறி விழுந்து விபத்து ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. பிரபாகரன் தரப்பில் விபத்து சம்மந்தமாக புகார் ஏதேனும் கொடுக்கப்பட்டதா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் இல்லை. பிரபாகரன் சிகிச்சை எடுத்துக் கொண்டதாக சொல்லப்படும் மருத்துவமனையிலிருந்து காவல் துறையினருக்கு ஏதேனும் தகவல் பெறப்பட்டதா என்ற விபரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். இந்தப் புகார்

கொடுத்து எதிரி நீதிமன்றத்திற்கு வரும் வரை இவர் தான் எதிரி என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். சம்பவம் குறித்து நான் காவல் நிலையத்திற்கு நான் எப்போது போனேன் என்றால் 07ம் தேதி இரவும், 08ம் தேதி காலையும் சென்றோம். அந்த சமயத்தில் என் மகனும், பிரபாகரனும் ஆட்டிக்குட்டி எடுத்துச் சென்ற விபரம் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. எனக்கு மேற்படி விபரங்கள் தெரியும் என்றும், என் மகனின் தவறை மறைப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து வழக்கில் நஷ்ட ஈடு பெறுவதற்காக பொய்யான புகார் கொடுத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மகன் மீது தவறு இருந்ததால் தான் 08.08.2020ம் தேதியில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியின் மீது எந்த தவறும் இல்லை என்றும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் அவர் கூறியவாறு தட்டச்சு செய்யப்பட்டு அவரிடம் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையொப்பமிட்டார்.

K S SHABEENA
Digitally signed by K S SHABEENA
Date: 2024.01.12 16:09:19 +0530

நீதித்துறை நடுவர்,
அவிநாசி.

Name of the Interpreter : K.S. Shabeena, Judicial Magistrate, Avinashi
Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 12th day of January 2024

K S SHABEENA
Digitally signed by K S SHABEENA
Date: 2024.01.12 16:09:27 +0530

Judicial Magistrate, Avinashi
Signature of Interpreter.